அனைத்து தனியார் வைத்தியசாலைகளின் தலைவர்கள் /தலைமை நிர்வாக அதிகாரிகள் / மருத்துவ பணிப்பாளர்கள் தனியார் மருத்துவ நிலையங்களின் உரிமையாளர்கள் / பிரதான நிர்வாக உத்தியோகத்தர்கள /
மருத்துவப் பணிப்பாளர்கள் பொறுப்பு மருத்துவ உத்தியோகத்தர்கள் ,
தனியார் மருத்துவ ஆய்வுகூட உரிமையாளர்கள் / ஆய்வுகூட முகாமையாளர்கள்/ மருத்துவ ஆய்வுகூட தொழிநுட்ப உத்தியோகத்தர்கள்

**முழுக் குருதி எண்ணிக்கை ( Full Blood Count) மற்றும் டெங்கு நோயை கண்டறிவதற்கான பரிசோதனைகள் (Antigen / antibody Test ) என்பவற்றுக்கான கட்டணங்கள்**

இதன்படி இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேதகு ஜனாதிபதியினதும் சுகாதார போசணை மற்றும் சுதேச வைத்திய கௌரவ அமைச்சர் அவர்களாலும் வழங்கப்பட்ட கீழ்வரும் வழிகாட்டுதலையும் ஆலோசனைகளையும் உடனடியாக அமுல்படுத்துமாறு தயவுடன் வேண்டப் படுகின்றீர்கள்.

1. முழுக் குருதி எண்ணிக்கை (FBC) பரிசோதனைக்கான கட்டணத்தை ரூபா 250/= இற்கு குறைக்கவும் மற்றும் ஒரு மணிநேரத்தில் சோதனை முடிவினை / அறிக்கையினை வழங்கவும் நடவடிக்கை எடுத்தல்.

2. டெங்கு நோயை கண்டறிவதற்கான பரிசோதனை (Antigen / antibody Test ) யின் கட்டணத்தை ரூபா 1000/= இற்கு அல்லது அதற்கு குறைவாக நிர்ணயித்தல்.

இந்த முடிவு அதிமேதகு ஜனாதிபதியின் தலைமையில் நடைபெற்ற தேசிய டெங்கு பணி செயற்திட்டக் கூட்டத்தில் வைத்து எடுக்கப்பட்டது.

உங்கள் ஒவ்வொருவரிடத்திலும் இத்தகவலை நோயாளிகள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் உங்கள் திணைக்கள ஊழியர்கள் அனைத்து பங்குதாரர்கள் அனைவருக்கும் அறிவிக்குமாறு சுகாதார போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு கரிசனையுடன் கோரிக்கை விடுக்கின்றது.

டெங்கு நோய் பரவலாக பரவிவருவது ஒரு குறிப்பிடத்தக்க பொது சுகாதார பிரச்சினையாக மாறியுள்ள இத்தருணத்தில் இந்நாட்டுக்கு நீங்கள் செய்யும் ஒரு கடமையும் சமூகப் பொறுப்பும் எனக் கருதி இதை நிறைவேற்றுமாறு தயவுடன் வேண்டப்படுகின்றீர்கள்

இது தொடர்பான உங்கள் நேர்மறையான வரவேற்பு மற்றும் பணிவான ஒத்துழைப்பு மிகவும் பாராட்டப்படுகின்றது.

கையொப்பமிட்டவர் - மருத்துவர் சாந்தி ஆரியரத்ன

பணிப்பாளர் / தனியார் சுகாதார அபிவிருத்தி துறை
செயலாளர் / தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்கமைப்புச்சபை

பிரதிகள்
1. அதிமேதகு ஜனாதிபதி இலங்கை
2. கௌரவ அமைச்சர் சுகாதார போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு
3. செயலாளர் அதிமேதகு ஜனாதிபதி
4. செயலாளர் சுகாதார போசனை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு
5. சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் சுகாதார போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு
6. பணிப்பாளர் நாயகம் , நுகர்வோர் விவகார அதிகார சபை
7. அனைத்து மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்
8. அனைத்து பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்
9. பணிப்பாளர் , டெங்கு ஒருங்கிணைப்பு பிரிவு
10. பிரதான தொற்று நோய் நிபுணர்
11. செயலாளர் , தனியார் வைத்தியசாலைகள் சங்கம்